ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2241/42 - 2021 අගෝස්තු මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.08.19
*2241/42 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**நாணய விதிச் சட்டம்**

*திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை முதன்மைச் சட்டவாக்கத்தின் 422 ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்,**
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி.

*2021, ஒகத்து 19.*

**ஒழுங்குவிதி "ஈ"**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

*நாணயச் சபையால் ஆக்கப்பட்டு 2013, ஏப்பிறல் 12 ஆந் திகதிய 1805/39 ஆம் இலக்க,* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2013, யூன் 26 ஆந் திகதிய 1816/13 ஆம் இலக்க, 2015, திசெம்பர் 31 ஆந் திகதிய 1947/39 ஆம் இலக்க மற்றும் 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதிய 2089/28 ஆம் இலக்க, 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதிய 2091/02 ஆம் இலக்க, 2018, ஒற்றோபர் 12 ஆந் திகதிய 2092/62 ஆம் இலக்க, 2018, நவெம்பர் 14 ஆந் திகதிய 2097/15 ஆம் இலக்க, 2019, பெப்புருவரி 22 ஆந் திகதிய 2111/50 ஆம் இலக்க, 2020, மாச்சு 17 ஆந் திகதிய 2167/4ஆம் இலக்க மற்றும் 2020, யூன் 16 ஆந் திகதிய 2180/19 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டவாறான ஒழுங்குவிதி "ஈ" 2021, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது.

**ஒழுங்குவிதி 2(i) (ஆ) இல்** "2.00 சதவீதம்" என்ற எண் தொகையினையும் சொற்களையும் நீக்கி அதனிடத்து "4.00 சதவீதம்"என்ற எண் தொகையினையும் சொற்களையும் பதிலிடுவதன் மூலம்.

*அட்டவணை அ, பின்வரும் அட்டவணை அ மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.*

1A — G 34884 - 40 (2021/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை

வங்கியின் பெயர் ..........................................................................................................................................................................

.............................................. தொடக்கம் ............................................ வரையான காலத்திற்கானது.
(திகதி) (திகதி)

சேரல் :
பணிப்பாளர்
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலைநாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i)<br>கேள்வி<br>வைப்புக்கள் | (ii)<br>கால மற்றும் சேமிப்பு<br>வைப்புக்கள் | (iii)<br>நாணயக் கடிதங்களுக்கு/<br>ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள்<br>நியதிகளுக்கு எதிரான எல்லைகள் | (iv)<br>அனைத்து ஏனைய<br>வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |

1. வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

...................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. விடயத்திற்கு ஏற்றவாறு<br><br>அ.<br><br>(i) "மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்" மீதான 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அல்லது<br><br>(ii) "மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்" மீதான 2018, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு<br><br>அத்துடன்<br><br>ஆ. 2018, ஒற்றோபர் 11 ஆந் திகதியிடப்பட்ட 2018 இன் 2 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதி களுக்கு எதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம். | |

| | விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|---|
| 2. | மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 4 சதவீதம். | |
| 3. | மேலே 1 மற்றும் 2 இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 3 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. | ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம் / சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி :..............................

..............................................,
உத்தியோகபூர்வ கையொப்பம்.

**குறிப்பு** -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்படவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.